விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மார்கழி 5 ராபி ஆகி 7 இதழ் 313
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 20-12-1985

யாழ்ப்பாணம்

நான்கு லட்சம்

## இந்திய வம்சாவழியினருக்கு அடுத்தமாதம் பிரஜாவுரிமை?

### சபையில் லக்ஷ்மன் பேச்சு

[கொழும்பு]

அடுத்த மாதம் 4 லட்சம் இந்திய வம்சாவழியினருக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருக்கிறது. இதற்கான சட்டம் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன் என்று அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திய வம்சாவழியினருக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்ட பின்னர் தோட்டக் கைத்தொழிலும் அவர்களது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என்றும் அவர் சொன்னார். (ய மா)

### மூடவேண்டாம்

(கொழும்பு)

''கூட்டுத்தாபனங்களை மூடிவிட்டு ஊழியர்களின் வேலைவாய்ப்பை இழக்கச் செய்வதன் மூலம் தீவிரவாதிகளின் பிடிகளுக்கு அவர்களைத் தள்ளிவிடுகிறீர்கள்''

[5-ம் பக்கம் பார்க்க[

# சுவிஸ் அரசு உயர்மட்டக் குழு

# திடீர் யாழ். விஜயம்

## பிரஜைகள் குழு மகஜர் கையளிப்பு

(கா. யோகநாதன்)

**''இலங்கையில் அரசியல் தீர்வு காணப்படும்வரை சுவிற்ஸலாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இங்கு அனுப்பவேண்டாம்'' என்று யாழ்ப்பாணம் வந்துள்ள சுவிஸ் குழுவினரை யாழ். பிரஜைகள் குழுவினர் கேட்டுக்கொண்டனர்,**

யாழ்ப்பாணம் அசோகா ஹோட்டலில், சுவிஸ் குழுவினரை நேற்று பிற்பகல் யாழ். பிரஜைகள் குழுவினரும். அன்னையர் முன்னணியினரும் சந்தித்து மகஜர்கள் சமர்ப்பித்ததுடன் இங்குள்ள நிலைமைகள் பற்றி விளக்கிக் கூறினர்கள்.

இலங்கையிலுள்ள சுவிஸ் தூதராலய பொறுப்பாளர் திரு. கௌவ்மன், சுவிஸ் குழுவிற்கு தலைமைதாங்கினார். சுவிஸ் நீதிஅமைச்சைச் சேர்ந்த டாக்டர் விறென் டெல்வ், டாக்டர் ஸீக்வ்ச் வேர்ட்மார்சல் ஆகியோரும், சுவிஸ்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

நேற்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு இரவு 7 மணிவரை நீடித்தது.

யாழ் பிரஜைகள் குழுவில் குழுச்செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், வண பிதா மைக்கேல்சாமி, யாழ். வைத்திய அத்தியட்சகர், டாக்டர் சி. நச்சினர்கினியர், டாக்டர் ஜெகாபசுபதி, திரு. ஆர். ஜே. குணரத்தினம், டாக்டர் டீ. இராமதாஸ், டாக்டர் மோகனதாஸ், திரு. எஸ். ஆர். அருமைநாயகம், திரு என். கந்தசாமி, திரு, விசுவலிங்கம் சட்டத்தரணி சேவியர், திரு. எஸ். முருகமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

யாழ்.பிரஜைகள் குழுவினர் தெற்கில் இனக்கலவரத்தின் போது நடந்த சம்பவங்களை புள்ளிவிபரங்களுடன் எடுத்து விளக்கி தென்பகுதிக்கு சுவிஸில் உள்ள தமிழ் அகதிகளை அனுப்பவேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர்.

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிமேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஆனால் கடந்த சிலமாதங்களாக யாழ்ப்பாணத்தைத்

(5-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைச் சம்பவத்தில் பொதுமக்களிடம் பிடிபட்டவர் மர்மமாக மரணம்?

(மட்டக்களப்பு)

கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவர் பொதுமக்களிடம் அகப்பட்டுக் கொண்டதும் மரணமானார்.

காத்தான்குடி தபால்நிலையத்தில் நேற்றுக்காலை கொள்ளை அடித்துக்கொண்டு சென்றவர்களில் ஒருவரே மரணமானவராவார்.

இனந்தெரியாத மூவர், இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தனர். சுமார் 750 ரூபா கொள்ளை அடித்துக் கொண்டு தபால் நிலையத்திலிருந்து வெளியே வரும் பொழுது, அங்கு குழுமிநின்ற

(5-ம்பக்கம் பார்க்க)

## காங்கேசன் தொழிற்சாலை ஒரு பிரிவு மூடப்படும்?

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையில் உள்ள ஆயுதப் படையினரின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்குள்ள பெரிய தொழிற்சாலை ஒன்றின் ஒரு பிரிவை மூடிவிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பலாலி இராணுவ முகாமுக்கு அண்மித்த பகுதிகளும் பாதுகாப்புக் கருதி, பற்றைகள், செடிகள், பனை வடலிகள் அகற்றும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

கடந்த சில தினங்களாக அப்பகுதிகளிலுள்ள ஆண்கள் இச்சிரமதான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர்.

அடர்த்தியாக ஓங்கிவளரும் பயனுள்ள பயிர்கள் உற்பத்தி செய்வதற்கு இப்பகுதிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## தமிழ்பகுதிகளை பிரிப்பதற்கு இடமளிக்க முடியாது

### சென்னையில் கூட்டணி அறிக்கை

(சென்னை)

தமிழ்ப்பிரதேசங்களைப்பிரிப்பதற்கு எந்தச்சமயத்திலும் இடமளிப்பதில்லை என்று தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது.

இந்தக் கட்சியின் அரசியல் குழு (பொலிட்பீரோ) கடந்த 17ம் திகதி சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைஇனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்தமாற்று யோசனைகளை இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சாதகமான முறையில் பரிசீலிப்பார் என்று இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ள கூற்றுக்கு இந்த அறிக்கையில் அவருக்கு பாராட்டுத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அப்பாவித் தமிழர்கள்மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## கடைகள் தகர்ப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பொலிஸ்-இராணுவ கூட்டுமுகாமுக்கு அருகாமையில் பூட்டப்பட்டிருந்த கடைகள் ஆயுதப்படையினரால் தகர்க்கப்பட்டுள்ளன.

இக்கடைகளைத் தகர்ப்பதற்குமுன்னர், கடைக்குள்ளிருந்த பொருட்களை அவர்கள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ''சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்க!''

[கொழும்பு]

''சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்க எதிர்க்கட்சினயிரை கைதுசெய்வதை நிறுத்துக, அரசியல் கைதிகளை மனிதாபிமான முறையில் நடத்துக!''

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரும் இயக்கம் அண்மையில் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் கோரியுள்ளது.

இந்த இயக்கத்தின் கூட்டமொன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பல்வேறு கட்சிப் பிரமுகர்கள், மற்றும் பல்வேறு அமைப்புக்களின் உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், மகளிர் அமைப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தின் இறுதியில் இணைப்பாளர் திரு. சார்ள்ஸ் அபேசேகராவினால் வெளியிடப்பட்ட இவ்அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''அண்மைக்காலத்தில்தென்

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்றுமுதல் 'இன்ரசிற்றி' ரயில்

### கொழும்பு - யாழ். மட்டுமே!

[யாழ்ப்பாணம்]

கொழும்பு — யாழ்ப்பாணம் 'இன்ரசிற்றி' ரயில் சேவை இன்றுமுதல் மீண்டும் வழமைக்கு வருகிறது.

இச்சேவை கொழும்பு— யாழ்ப்பாணம் மட்டுமே நடைபெறும்.

கொழும்புக் கோட்டையிலிருந்து இன்று அதிகாலை 5 45 க்குப் புறப்படும் 'இன்ரசிற்றி' நண்பகல் 11-55க்கு யாழ்ப்பாணம் வந்துசேரும். இந்த ரயில், இன்றையதினமே பகல் 1-00 மணிக்கு கொழும்புக்குப் புறப்படும்.

'இன்ரசிற்றி, ரயில்சேவை

(5-ம் பக்கம் பார்க்க)

## இவர்களுக்கு பதவிஉயர்வு வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பத்துவருட காலம் சேவையாற்றிய சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கவேண்டும் என்று சுகாதார போதனா அமைச்சருக்கு, அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளை செயலாளர் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சில வைத்தியசாலைகளில் பத்துவருடகால சேவை முடிய முன்பும் சிலருக்கு பதவிஉயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும், அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ஆயுதப்படைசூடு: இளைஞர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடாப்பகுதியில் நேற்று சோதனை நடாத்திய ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் பலியானார்.

ரவிநாதன் (22-வயது) என்பவரே பலியானவராவார்.

இறந்த இவ்விளைஞரின் சடலத்தை ஆயுதப்படையினர் எடுத்துச்சென்றனர். (மா)

## அசாம் கனபரிசத் முன்னணியில்

[ஹொகாட்டி]

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் அங்கு உதயமான புதிய கட்சியான அசாம் கனபரிசத் தொடர்ந்து முன்னணியில் உள்ளது.

இதுவரை வெளியான 99 முடிவுகளில் இந்தக் கட்சிக்கு 54 இடங்கள் கிடைத்துள்ளன. இந்திரா காங்கிரஸ் கட்

[5-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒலிப்பதிவு செய்யப்பட்ட - கசெற் - [1] திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி - கசெற். [2] மார்கழி மாதத்தின் மகிமையும் சக்தியின் சிறப்பும் - வாரியார் பிரசங்கம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [2499]

Bairaha Farms புறொயிலர் குஞ்சுகள், Nel Farm சேவற் குஞ்சுகள் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [247 ]

கட்டடங்கள் உடைத்த கற்கள், றோட்டுப்போடவும் மற்றும் பல தேவைகளுக்கும் உகந்தவை. முக்கால் கியூப் விலை ரூபா 50/- யூனிபோ - UNIFO பலாலிவீதி, உரும்பிராய். 2437

குளிர்சாதனப்பெட்டி, வீட்டுத் தளபாடங்கள், சாப்பாட்டுமேசைகள், கதிரைகள், கட்டில்கள், அலுமாரிகள், செட்டிகள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், இங்கிலீஸ் பாத்திரங்கள், டினர்செட்கள், பாவித்த இரும்பு கேட் ஆகியன உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆனந்தன், கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் உள்ள சந்திரா சலூனுக்கு பக்கத்திலுள்ள சாந்தினி இல்லத்தில் பார்வையிடலாம். [2474]

எமது நிறுவனத்தால் விற்பனை செய்வதற்காக, நீர்வேலியில் வீடு கட்டுவதற்கு உகந்த நல்ல 5 பரப்புக் காணிஉண்டு. வாங்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க. தொடர்பு முகவரி: சமுத்ரா மல்ரி சேவிஸஸ், 303, பலாலி றோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில். [2487]

மலிவு விற்பனை இப்பொழுது நடைபெறுகிறது. உருக்குத் தளபாடங்கள்: கதிரைகள், சிறிய மேசைகள், Stools, Flower Stand, T. V. Stands மற்றும் Gas cooker (690/-), 6-band Sony றேடியோ (பாவித்தது) 1250/-. Dyn Ads காட்சியறை, 476, பிரதான வீதி, சுண்டிக்குளி, (சென்ற். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக). [2497]

அல்சேசன் நாய்க்குட்டிகள் (Pure bread Alsation), குளிர் சாதனப் பெட்டிகள், தளபாடங்கள், தையல் மெசின், துவிச்சக்கர வண்டி (Chopper), கஸற் றேடியோக்கள், கலர் T. V., மருத்துவப் புத்தகங்கள், கம்பளங்கள், துணிவகைகள், வெளிநாட்டு கிளாஸ் வகைகள், மற்றும் பலபொருட்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், C/o திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது). [2494]

அரசாங்கத்தால் சிபார்சு பெற்ற விதை மிளகாய்க் கன்றுகள் MI I, MI II விற்பனைக்குண்டு. M. இராசநாயகம், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (2507)

## விற்பனைக்கு

திருநெல்வேலி கறுப்பின கத்தரிக் கண்டு விற்பனைக்குண்டு. மு. குமாரசாமி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. [2501]

Made in England 2 அந்தர் எடையுள்ள புதிய கொம்புப் பட்டடை (Anvil) பாவித்த புடிச்சிராவியும் விற்பனைக்கு உண்டு. (இல. 27, புங்கன் குளம் வீதி, யாழ்ப்பாணம்.) தொடர்பு: திரு. சி. பாக்கியநாதன், ஈஸ்வரன் கரும், 179, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [2482]

## தேவை

விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு விற்பனைத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடனே தேவை. சம்பளம்/கமிசன் அடிப்படையில் வேலை செய்ய விரும்புபவர்கள் 24 - 12 - 85 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் 2446, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (2446)

எமது ஸ்தாபனத்திற்கு Accounts cum Administrative Assistant பதவிக்கு Accounts, Typing. ஆங்கிலம் எழுத வாசிக்க அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். கடமை உணர்ச்சியும், நிர்வாகத் திறமையும் இருத்தல் அவசியம். ஆரம்ப சம்பளம் Rs. 400/-. தொடர்பு:- Service Manager, Refrigeration Engineering Services, 37/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [2495]

எமது ஸ்தாபனத்திற்கு English Typing, Accounts ஆகியனவற்றில் அனுபவம் வாய்ந்தவரும் யாழ். மாநகர சபைக்குள் வசிப்பவரும், 25 வயதுக்குட்பட்டவருமாகிய பெண் காசாளர் பதவிக்குத் தேவை. உடன் சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். Globe Industries, 173, 4-th Cross Street, Jaffna. [2486]

## மணப்பந்தல்

உயர் வேளாள குலத்து 27 வயதுடைய (France) பல்கலைக் கழகப்பட்டதாரிக்கும், 21 வயதுடைய ஜேர்மனியில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப மணப் பெண்கள் தேவை. சைவ போசனம் புசிப்பவர் விரும்பத்தக்கது. சீதன விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 2496, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2496]

## வாடகைக்கு

பண்டத்தரிப்பு நவீன சந்தைக்கு முன்பாக இரண்டு பெரிய கடைகள் தளபாடங்கள், ரெலிபோன் வசதியுடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; M. H. ஜேந்திரன், சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. [2477]

## வகுப்புகள்

B.T.I Feb 86 (Intermediate) துரித வகுப்புக்கள் ஆரம்பம். விபரங்களுக்கு: 181, ரெம்பிள் றோட், நல்லூர். [2483]

### WANTED

A qualified teacher of Woodwork to deal with classes up to the G. C. E. (O/L) Please apply on forms available at the college office on or before 10-1-1986. Principal, Jaffna College, Vaddukoddai. [2500]

### யாழ்ப்பாண அக்கடமி
### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1986
### துரிதமீட்டல் வகுப்புகள்

86ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் 6-1-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிபர்.
தொலைபேசி எண்: 22617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (2465)

### கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வாகனங்களுக்கு 1986 ம் ஆண்டிற்குரிய அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல மோட்டார் வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரம் 23-12-85 (திங்கட்கிழமை) தொடக்கம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் கிளிநொச்சிக் கச்சேரியில் வழங்கப்படும். ஆகவே கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கு பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி மோட்டார் வாகனச் சொந்தக்காரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

1. சென்ற ஆண்டின் அனுமதிப்பத்திரம் அல்லது அதைப் பெற்றுக் கொண்டதற்கான தகுந்த ஆதாரம் காண்பிக்கப்படல் வேண்டும்.

2. வாகன உரிமையாளரின் பெயரில் காப்புறுதிப்பத்திரம் (காலாவதியாகாதது).

3. மோட்டார் வாகனப் பதிவுப்புத்தகம் அல்லது வங்கி முகாமையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

4. அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களை பழுதுபார்க்கும் வேலைத்தலத்திலிருந்து(கராஜ்) தேவைப்படும் வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணம் 'அரசாங்க அதிபர், கிளிநொச்சி' என்ற பெயரில் காசுக்கட்டளை அல்லது வங்கிக் கட்டளை, அல்லது வங்கி ஆணைப்பத்திரம் மூலமாக செலுத்தப்படல் வேண்டும்.

என். ஜயநாதன்-
மாவட்டச் செயலாளரும்,
அரசாங் அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.
கச்சேரி,
கிளிநொச்சி.
18-12-85. (2498)

### சிமெந்து தொழிற்சாலை தொழிலாளருக்கு
### முக்கிய அறிவித்தல்

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையிலும் லங்கா சிமெந்து லிமிட்டெட்டிலும் **வேலைவங்கி ஊடாக** வேலை செய்தோரும் தற்சமயம் வேலை செய்பவர்களும் இதுவரை என்னைச் சந்திக்காவிடில் உடனடியாகச் சந்திக்கவும்.

மல்லாகம்,
18- 12-85.
சு. ஸ்ரீபாஸ்கரன். (2444)

# BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

## DAY CLASS

PURE
APP } திரு. நல்லையா

PHY - திரு. யோகேந்திரா

CHE } திரு. செல்வா
திரு. சிவநாதன்

**ஆரம்பம்: இன்று (20-12-85)**
**வெள்ளி நண்பகல் 12-00 மணி**

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி
### திருநாவுக்கரசு சதானந்தன்



மலர்வு:
18-5-1950

மறைவு:
20-12-1982

"எங்கள் நிறுவனத்துக்கு உயிர் தந்தாய்
உன் நினைவு எந்நாளும் எம்முடன் வாழும்"

## டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்.

[2478]

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### ஸ்ரீமான் வீரபாகு ஆனந்தராஜா



அன்னை மடியில்:
20-12-1926

ஆண்டவன் திருவடியில்:
21-11-1985

சபிண்டீகரணம்:
21-12-1985

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு"

வள்ளுவன் வழி வாழ்ந்து எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே! உமக்கு எம் இதய அஞ்சலிகள்.

எமது இல்லத்தில் 21-12-85 நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்.

'ஈஸ்வரி வாசா,'
தாவடி பிள்ளையார் கோவிலடி,
கொக்குவில். (2484)

● சர்வதேச பயங்கரவாதம்:

# ஐ. நா. முதல்தடவையாக கண்டனத் தீர்மானம்!

## ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேறியது!!

நியூயோர்க், டிச-19

**சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கண்டனத் தீர்மானமொன்றை இயற்றியுள்ளது. ஐ. நா. வின் சகல உறுப்பு நாடுகளினாலும் ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளும் இத்தீர்மானத்தைப் பெரிதும் வரவேற்றிருந்தது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.**

ஆட் சடத்தல், அப்பாவிமக்சளைப் பணயக் கைதிகளாக்குதல், பணய நாடகங்களின் மூலம் நாடுகளுக்குப் பதட்டத்தைக் கொடுத்தல், விமானக் கடத்தல் போன்ற அனைத்துப் பயங்சரவாதச் சம்பவங்களையும் இந்த ஐ. நா. தீர்மானம் கண்டிக்கிறது.

இத்தீர்மானத்தை அமெரிக்காவின் ஐ.நா.பிரதிநிதி ஜெனரல் வேர்ணன் வோல்ட்டேர்ஸ் கொண்டுவந்திருந்தார்.

ஐ.நா.வின் 40 வருடகால வரலாற்றில் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

''இத்தீர்மானத்தைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்ட சகல உலக நாடுகளும் ஏற்றுச் செயற்பட்டு, பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், பயங்கரவாதச் சந்தேகநபர்சளைக்கைதுசெய்து தண்டிக்கவும் முன்வரவேண்டும்'' என்று ஜெனரல் வோல்ட்டேர்ஸ் கேட்டுக்கொண்டார்.

மத்திய கிழக்குப் பிராந்தியமே உலக பயங்கரவாத நடவடிக்கைகளின் தளமாகவுள்ளதெனவும், இங்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சம அளவில் பாதிப்படைந்துள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

21-ம் நூற்றாண்டு சவால்கள்

# சீனாவில் புதிய இராணுவ பயிற்சிக்கல்லூரி!

பீக்கிங் டிச, 19

இருபத்தியோராம் நூற்றாண்டின் இராணுவ சவால்சளை எதிர் நோக்கும் வகையில் சீனா நவீன இராணுவப் பயிற்சிக கல்லூரி ஒன்றை அடுத்தாண்டில் ஆரம்பிக்கவுள்ளது.

இக் கல்லூரியில் விரிவுரைகளை நிகழ்த்தவென இராணுவத்துறையில் நிபுணத்துவமிக்க மேற்கு நாட்டுவிரிவுரையாளர்கள் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள்.

**உலகச் செய்திகள்**

இப்பயிற்சிக்கல்லூரிசீனாவின் முப்படைகளுக்கும் இராணுவத்துறை அணுசக்தி உட்பட விண்வெளியில் ஆயுதபாவனை போன்ற விடயங்களைப் போதிப்பதாக விளங்கும்.

சீனா அதிபர் டெங்சியாவோபெங்கின் பணிப்பின் பேரிலேயே இக்கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளது. [செ]

# எம். ஜி. ஆர், ஈ. தே. வி. மு. தலைவர்கள் சந்திப்பு!

சென்னை டிச, 19

ஈழத் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை நேற்று சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இம் முன்னணியில் அங்கம் வகிக்கும் நான்கு இயக்கங்களின் தலைவர்களான வே. பிரபாகரன், பாலகுமார், பத்மநாபா, சபாரத்தினம் ஆகியோரார் நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பின்போது, இலங்கையின் வடக்குக், கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை முதலமைச்சருக்கு இவர்கள் எடுத்துக் கூறினர்.

இப்பகுதிசளில் இராணுவத் தளங்கள் அதிகரிப்பு, நவீன ஆயுதங்களின் குவிப்பு மற்றும் இராணுவ கெடுபிடிசளினால் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை விளக்கிக் கூறியதாக இம் முன்னணியின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது முதலமைச்சர் நமது பிரச்னைகளை ஆழமாக செவிமடுத்து, இவற்றை மத்திய அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதாக கூறினார் என்று அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார். [செ]

## பிரேமா பெயரில் புலமைப்பரிசில்

(கொழும்பு)

பிரதமமந்திரி திரு. பிரேமதாஸாவை கௌரவிக்குமுகமாக அவருடைய பெயரில் புலமைப்பரிசில் ஒன்றை வழங்க இலண்டன் டல்சலைக் கழக அபிவிருத்தி சபை முன்வந்துள்ளது.

ஒரு லட்சம் ஸ்டேர்லிங் பவுண் பெறுமதியுள்ள இப்பரிசில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பை தொடர விரும்பும் இலங்கை மாணவர் ஒருவருக்கு வழங்கப்படும்.

வீடமைப்புத்துறைக்கு திரு. பிரேமதாஸா ஆற்றி வரும் சேவையை கௌரவிக்குமுகமாகவே இப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

## பனை ஓலை வாழ்த்துக்கு பெரும் வரவேற்பு

(கோப்பாய்)

கோப்பாய் வட்டாரக்சல்வி மூலவள நிலைய பனம் பொருள் கைப்பணிப் பகுதியினர் அழகான பனை ஓலை கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்து மடல்களைத் தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளனர். சுயவேலை வாய்ப்பை பெற்று, பல யுவதி

(7-ம்பக்கம் பார்க்க)

## பனிக்கட்டிகள் மூடியதில் இரு கார்ப் பயணிகள் பலி!

ஸ்ரீநகர், டிச-19

பனிக்கட்டிசள் மூடியதால் இரு பயணிகள் கொல்லப்பட்ட சம்பவம் காஷ்மீரில் நடந்துள்ளது.

இச்சம்பவம் காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் - கார்கில் நெடுஞ்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

பனிப் புயல் வீசிக்கொண்டிருக்கையில் இவ்வீதியால் சென்றுகொண்டிருந்த இரு கார்ப் பயணிகளே இவ்வாறு மரணமடைந்தனர். காரிலிருந்த இன்னொருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காஷ்மீரில் இப்போது கடும்பனி பொழிகிறது. எங்கும் பனிப் புகாராக இருப்பதனால் பாதைகள் தெளிவாகத் தெரியாமல் இன்னும் பல விபத்துகளும் நடக்கலாம் என அஞ்சப்படுகிறது. (செ)

★

போதைவஸ்து:

## உலகம் சுற்றிய பிரிட்டிஷ் விரிவுரையாளருக்கு சிறை!

பாரிஸ், டிச-19

பிரிட்டிஷ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்குப் போதைவஸ்துக் கடத்தல் தொடர்பாகப் பிரெஞ்சு நீதிமன்றமொன்று 15 வருடச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

பிரான்ஸிஸ் என்ற இந்த விரிவுரையாளர் கடந்த ஆண்டு பாரிஸில் கைதானார். உலகின் அரைப் பங்குப் பகுதியைத் தமது மோட்டார்காரில் சுற்றிப் பார்க்கும் பயணமொன்றை இவர் மேற்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்பயணத்தின் ஒரு கட்டமாகப் பாரிஸ் வந்தபோதே இவர் கைதானார். இவரது மோட்டார்காரில் 'கனிபஸ்' என்ற போதைவஸ்துப் பொடி 143 பைகளிலே மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே பிரெஞ்சுப் பொலிசாரால் இவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த பிரிட்டிஷ் விரிவுரையாளர் ஒரு பிரபல சர்வதேச போதைவஸ்துக் கடத்தற் பிரிவின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைவஸ்து பல கோடிக்கணக்கான ஸ்டேர்லிங் பவுண்கள் பெறுமதியுடையவை என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

பிலிப்பைன்ஸில்

# 200 கப்பல் பயணிகள் கடலுக்குப் பலி?

மணிலா டிச, 19

மத்திய பிலிப்பைன்ஸ் கடலில் பெரும் பயணிசள் கப்பலொன்று நீரில் மூழ்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதில் சுமார் 200 பேர்பலியகியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

மத்திய பிலிப்பைன்ஸ் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பினாலேயே இக்கப்பல் விபத்து நிகழ்ந்ததென்று கூறப்பட்டது.

வேறொரு சப்பல்இவ்விபத்து நிகழ்ந்த கடல்பகுதியில் சுமார் 3 பேரை மட்டுமே காப்பாற்றியதாகவும். ஏனையோரின் கதிபற்றி உதுவும்தெரியவில்லை எனவும் தெரிவிக்கபபட்டது. அவர்கள் அநேகமாக இறந்திருக்கலாம் மென்று அஞ்சப்படுகிறது. [கி]

# 27 கெரில்லாக்களுக்கு கடுந்தண்டனை!

பெல்பாஸ்ட் டிச, 19

வட அயர்லாந்தில் 27 ஐரிஷ் பிரிவினைவாத கெரில்லாக்களுக்கு பிரிட்டிஸ் நீதிமன்றமொன்று நேற்று கடும் தண்டனைவழங்கியுள்ளது.

இந்த இருபத்தியேழு செரில்லாக்களும் ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் ஒரு பிரிவான ஐரிஷ் தேசிய விடுதலை இராணுவத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் பத்து கெரில்லாக்களுக்கு ஆயுள்காலத் தண்டனையும், பதினேழு கெரில்லாக்களுக்கு எட்டு முதல் இருபது ஆண்டு வரையிலான சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. கொலை உட்பட பல்வேறு பயங்கரவாத செயல்களுக்காக இவர்சளுக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது.

இக் குற்றவாளிகளில் மிக முக்கியமானவராக இருபத்தியெட்டுவயதுடைய ஜெரால்ட் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். இப் பயங்கரவாதி ஆறு கொலைகள் உட்பட அறுபத்தெட்டு பயங்கரவாத செயல்கள் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தண்டனைகள் அளிக்கப்பட்ட மறுகணம் இந்த இருபத்தியேழு கெரில்லாக்களும் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் பொலிஸாரும், பாதுகாப்புப் படையினருமே இக் குற்றவாளிகளின் நடவடிக்கைகளுக்குப் பெருமளவு பலியானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [செ]

## நவாலி பிரஜைகள் குழு

(சுண்டிக்குளி)

நவாலி பிரஜைகள் குழுவினரின் பொதுக்கூட்டம் அண்மையில் நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தற்காலிக தலைவர் திரு. சு. சதாசிவம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் கலந்து

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

தன்னைத்தானே திருத்திக் கொள்ளாதவன் பிற ஜந்துக்களைத் திருத்த அதிகாரம் பெறமாட்டான். தன்னைத் தானே திருத்திக்கொள்வதே பிரதானம். தன்னைத்திருத்தி அமரனுகச் செய்து கொள்க. அதுவே ஒருவன் செய்யக்கூடிய தலைமைத் தொழில்.

— மகாகவி பாரதியார்.

# நமது நோக்கு

## தமிழர்தம் கலை கலாசாரத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமாம்!

குயிலைப் பார்த்து ''நீ பாடாதே'' என்றும், மயிலைப் பார்த்து ''நீ ஆடாதே'' என்றும் சொல்பவர்களைப் பார்த்து நாம் என்ன சொல்லலாம்?

இவர்களின் அறியாமைக்காக மனவருத்தப்படலாம்; வேறென்ன செய்வது?

பாடுவது குயிலின் பண்பு. ''நீ இப்படிப் பாடக்கூடாது; உன் குரலை மாற்றிக்கொண்டு வேறுவிதமாகப் பாடப் பழகிக்கொள்'' என்று கூறுவது போலிருக்கின்றது தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலரின் கூற்று.

குயிலோ மயிலோ இந்தியாவில் இருந்தால் என்ன இலங்கையில் இருந்தால் என்ன குயில் கூவத்தான் செய்யும். மயில் ஆடத்தான் செய்யும். அதில் மாற்றம் செய்யும்படி கேட்பது மடமை.

தமிழர்களுக்கென இசை, நடன, கலாசார மரபுகள் உண்டு. ஆயிரக்கணக்கான வருடங்களாக அவை பேணப்பட்டும், ஊனேடும் உயிரோடும் இரண்டறக் கலக்கப்பெற்றும் நிலைகொண்டுவிட்டவை. படிப்பறிவில்லாத ஏழை எளியவர்களான மக்கள் மத்தியிலும்கூட இவை வேரூன்றி நிலைத்துவிட்டவை.

அதனாலன்றே வேற்றுக் கலை, கலாசாரங்களுக்கிடையில் வாழ்ந்தாலும் பல்வேறு இன்னல்களுக்கும் நெருக்குதல்களுக்கும் ஆட்பட்டுவிட்ட நிலையிலும் தம் மொழி, கலை, கலாசாரத்தைப் பேணிவருகிறார்கள் மலையகத் தமிழ் மக்கள்.

இந்தக் கலாசாரங்கள் தென்னிந்தியத் தமிழர்களோடு எம்மை நெருக்கமாகப் பிணைத்திருப்பதை விரும்பாதவர்களே இப்புதிய கோஷங்களை எழுப்புகிறார்கள்.

இங்கு பேணப்படும் எந்த ஒரு கலையும், கலாசாரமும், அவையோடு தொடர்புள்ள மதங்களும் இந்த நாட்டுக்கே உரித்தானவையென்றே, அவை இங்கேயே உருவானவையென்றே எவரும் அறுதியிட்டுச் சொல்லிவிடமுடியாது. சிங்கள மொழியும்கூட பாளி, சமஸ்கிருத மொழிகளால் போஷிக்கப்பட்ட மொழியே!

சில காலத்திற்கு முன் இசைமேதை ரவிசங்கர் அவர்கள் இலங்கை வந்தபொழுது, இலங்கையர்களுக்கென (சிங்களவர்களுக்கு) ஒரு இசைமரபு இல்லாமை குறித்துக் கவலை தெரிவித்திருந்தார். தமிழர்களுக்குக் கர்நாடக இசை மரபு இருக்கிறது. சிங்களவர்கள் வட இந்திய இசை மரபைப் பின்பற்றுகிறார்கள். இவர்கள் தங்களுக்கு என ஒரு இசை மரபைத் தோற்றுவித்துக்கொள்ள வேண்டுமென அவர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிலைமை இவ்வாறிருக்க தமிழர்கள் தம் கலை, கலாசாரங்களை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பது விசித்திரமாக இருக்கிறது.

சிங்களவர்களுக்கு தனியாக கலைகலாசார மரபுகள் இருப்பது அவசியமாகலாம். ஏனெனில் இலங்கையைவிட வேறுநாடுகளில் அவர்கள் இல்லை. அவர்களின் மொழியும் இங்கு மட்டுமே பேசப்படுகின்றது. ஆனால் தமிழரின் நிலைவேறு; மொழியால் மட்டுமன்றி திராவிட இனத்தாலும் அவர்கள் பரந்து வாழ்பவர்கள். எனவே அவர்களின் கலைகளும் கலாசாரங்களும் பரந்துபட்டதாகவும், பலவிடங்களிலும் பேணப்படுவதாகவுமே இருக்கும். இந்நிலையில் இலங்கையில் வாழும் தமிழர்களை மட்டும் வேறுவிதமாக வாழுங்கள், மாறுங்கள் என்று கூறுவதில் அர்த்தமில்லை. அது சாத்தியமுமில்லை.

ஏனெனில், அவர்கள்என்று தம் கலை, கலாசாரங்களை மாற்றிக் கொள்கிறார்களோ அன்றே அவர்கள் தமிழர் என்ற இனத்தினின்றும் வேறுபட்டவர்களாகி விடுவார்கள்.

''தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு'' என்று பாடுவார் நாமக்கல் ராமலிங்கம்பிள்ளை.

தமிழன் தமிழனுகவிருப்பதால் அவன் தன் மூதாதையரால் பேணிப்பாதுகாக்கப்பட்ட மொழியை, கலை, கலாசார மரபை அவை வளரும் நிலத்தை தன் கண்ணிமைபோல் பாதுகாத்திட வேண்டும்.

## "யாழ். பல்கலைக்கழகத்தில் சித்திரக் கலைக்கும் இடமளிக்கப்பட வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''யாழ். பல்கலைக்கழகத்தில் நுண்கலைப்பிரிவில் இசை, நடனம் ஆகிய துறைக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போன்ற முக்கியத்துவத்தை சித்திரக் கலைக்கும் அளிக்க வேண்டும். பல்கலைக்கழகத்தில் கட்டிட நிர்மாணத்துறைப்பிரிவு மாணவர்சள் உயர்வகுப்பில் சித்திர பாடம் பயின்றவர்களாயிருந்தால் அதனுல் மிகவும் நன்மை அடைகிறார்கள்'' இவ்வாறுவட மாநிலக் கல்வித்திணைக்கள சித்திரக் கல்வி அதிகாரி கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை யாழ். மத்திய கல்லூரியில், சேவைக்காலச் சித்திர வகுப்புக் கருத்தரங்கை மங்கலவிளக் கேற்றிவைத்து ஆரம்ப உரைநிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில், ''பாடசாலை மாணவர்சள் 9ம் தரம்வரை சித்திரத்தைக் கட்டாய பாடமாகக்கற்கிறார்கள். ஆனுல் 10-ம், 11-ம் வருடங்களில் கற்கும் மாணவர்கள் மிகச்சிலரே சித்திரத்தை ஒரு பாடமாகக் கற்கிறார்கள். சித்திர பாடத்தை வர்த்தகபாடத்துடன் இணைத்துத் தெரிவுப்பாடமாகச் செய்ததினுலேயே மிகக்குறைந்த மாணவர்கள் சித்திரம் கற்கும் நிலை ஏற்பட்டது எனலாம். இந்த நிலைமாறுமானுல் சித்திர பாடம் எடுக்கும் மாணவர் தொகை அதிகரிக்கும்'' என்றார்.

### இன்று ஓவியக்காட்சி

கடந்த 16-ம் திகதி ஆரம்பமான இப்பயிற்சி வகுப்புக்கள் இன்று வெள்ளி வரை நடைபெறும். யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை இன்றைய கருத்தரங்கில் கலந்துகொள்வார். இன்று கலைஞர்களின் ஓவியக் கலைப்படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்படும். [ஐ]

## இலங்கை முஸ்லிம்களுக்கு அமைச்சர் விடுத்துள்ள அபாயச் சங்கு

இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவரும் ''சுன்னத - வல் - ஜமாஅத்தினராகும்''. ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்களை ''ஸீயாக்கள்'' என அழைப்பர். எம்முடைய அடிப்படைக் கொள்கைகளுக்கும் ஸீயாக்களின் கொள்கைகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. ஒரு உண்மை முஸ்லிம் ஈரானியர்களின் கொள்கைகளை எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டான். ஈரானியர்களை தங்களது முன்னேடியாகக் கொள்ளும் அவர்களை, அவர்களின் கருத்துக்களை, மார்க்க வழிமுறைகளை, வானளாவப் புகழ்பவர்கள், அவர்களிடமிருந்து உதவிகள் பெறுபவர்களையிட்டு சுன்னத் - வல் ஜமாஅத்தினராகிய நாம் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

கலாசார அமைச்சரின் எச்சரிக்கை!

ஈரானிய கொள்கைகள் பல இயக்கங்கள் மூலமாக, அமைப்புகள் மூலமாக உலகம் பூராவும் பரப்பப்பட்டுவருகின்றன. இக்கொள்கைகளால் லெபனுனில் இரத்தக் களரி. மலேசியாவில் இக்கொள்கைகளால் பாரதூரமானவிளைவுகள். அதனுல் அங்கு அவைக்குத்தடை. ''இக்கொள்கைகளால், இரத்தக்களரி, ஒற்றுமையின்மை, இனக்கலவரம் ஆகியவை ஏற்படலாம். ஆகவே இவ்விஷயத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று அமைச்சர் எம். ஏச். முஹம்மது அவர்கள் சமீபத்தில் பாராளுமன்றத்தில் முழங்கியுள்ளார்.

ஈரானியர்களின் கொள்கைகள் பல பதிப்புகளாக நம் நாட்டில் உலவிவருகின்றன. அப்பதிப்புகளுக்கு மார்க்கம் என்ற மேலாடை போர்த்தப்பட்டு உலவவிடப்பட்டுள்ளன. இங்குள்ளவர்களை ஈரானுக்கு அழைத்து பயிற்சிகளுடன் கொள்கைகளும் புகுத்தப்பட்டு சுன்னத்-வல்-ஜமாஅத்தினரை பிளவுபடுத்த அனுப்பப்படுகின்றனர். இது கௌரவ அமைச்சர் அவர்களின் கண்டுபிடிப்பு. மறுக்க முடியாது! அறிந்தும், அறியாமலும், பணத்துக்காகவும் இங்குள்ள சில இயக்கங்கள், அமைப்புகள் அவர்களுடைய பதிப்புகளை மக்கள் மத்தியில் விநியோகம் செய்து, கொள்கைகளைப் பரப்பவும் செய்கின்றனர். தென்னக்கும்புரப் பகுதியில் இந்நாசகார பதிப்புகள் விநியோகம் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

# மக்கள் கருத்து

இஸ்லாத்தை ஆரம்பகாலத்தில் வளர்த்தவர்கள் நாயகத் தோழர்கள். மதிப்புக்குரிய அந்நாயகத் தோழர்கள்பலரை மிகக்கேவலப்படுத்தி.இலங்கை வாழ் முஸ்லிம்களின் உள்ளமும், உணர்வுகளும் கொதித்தெழும்ப ஈரானிய ஒரு பதிப்பு இலங்கையில் விநியோகம் செய்யப்பட்டதைபொத்துவில் முதல்வரும், அமைச்சர் முஹம்மது அவர்களும் சமீபத்தில் நாடாளுமன்றத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இவை பெரிய சதி, பயங்கரமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஈமானைப் பாழ்படுத்திவிடும் (ஈமான் என்பது நம்பிக்கை):-

ஈரானிலிருந்து விநியோகஞ் செய்யப்படும் பதிப்புகள், அவைகளை மக்கள் பார்வைக்காக வைக்கும் இயக்க நூல் நிலையங்கள், அமைப்புகளையிட்டு முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவைகளால் எமது நம்பிக்கைகளும் உறுதியும் பாழ்பட்டுவிடும்.

''நாங்கள்இந்நாட்டில் எட்டு சத விகிதத்தினராக வாழுகின்றோம். ஒற்றுமையாக வாழுகின்றோம். எமது ஒற்றுமையைக் குலைக்கவேண்டாம். ஈரானியர்களா வெளியிடப்பட்டுள்ள தவறான கருத்துக்களைக் கொண்டபுத்தகங்களால் பெரும் இரத்தக்களரி ஏற்பட வாய்ப்புண்டு. இவைகளால் இளைஞர்கன் வழிதவறவாய்ப்புண்டு. ஸீயாக்களின் பிரித்தாளும் தன்மைக்கு எதிராக

[5-ம் பக்கம் பார்க்க]

## "மாணவர்களின் வளர்ச்சிக்கு பெற்றோர் ஆதரவு வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம் தாம்நடாத்த எண்ணியுள்ள குருநகர் மக்களுக்கான கல்விப் புலமைப் பரிசில் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக குருநகர் சென் ஜேம்ஸ் ஆண் பெண் பாடசாலைகளின் முதன்மை மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கிக் கௌரவித்தது. இந்நிகழ்ச்சி குருநகர் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் பிரதம விருந்தினர் அருள்திரு. பீற்றர் துரைரத்தினம் சமூகத்தில் ஆரம்பமாகியது. குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சி. தவரத்தினம் தலைமை தாங்கினுர்.

இப்புலமைப் பரிசில் திட்டம் தற்பொழுது சென் ஜேம்ஸ் பாடசாலைகள் இரண்டின் மட்டத்தில் இருந்தாலும் வருகிற வருடம் முதல் குருநகர் மாணவர்கள் வேறுபாடசாலைகளில் கல்வி பயின்றலும் அவர்களும் பயன்படக்கூடிய விதத்தில் விஸ்தரிக்கப்படும் என்று தலைவர் தமது உரையில் கூறினுர். அடுத்துப் பேசிய சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் தமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குச் சங்கத்தினரோடு பெற்றோரும் ஆதரவு நல்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

சென் ஜேம்ஸ் மகாவித்தி

(7-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிச் சிந்தனை

# மார்கழி

அருளாளன்

மார்கழி மாதத்திற்குத் தனிப்பட்ட பல சிறப்புக்கள் உண்டு. இதன் முதன்மை கருதியே கீதையில் கண்ணன் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன் என்று கூறியுள்ளான். இப்படியிருக்க பலர் மார்கழி மாதம் என்றுல் பீடை (குற்றம்) உடைய மாதம் என்று கருதுகின்றனர். இவர்கள் தாம் சொல்லும் கருத்துக்கு ஆதாரமாக திருமணம்- குடிபுகல் முதலிய கருமங்களுக்கு மார்கழிமாதம் விலக்கப்பட்டதாக உள்ளது என்பதை ஆதாரம் காட்டுவர். உண்மையில் மார்கழி மாதம் தெய்வீகம் நிறைந்த மாதமாகவேஇருக்கிறது.தெய்வீகப்பண்பைப் பேணவும் போற்றவும் பிறசெயல்கள் இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே பிற நற்கருமங்கள் கூட விலக்கப்பட்டுள்ளன.

மார்கழி மாதத்திற்குரிய பாவை நோன்பினை சைவ மக்கள் சிவ விரதமான திருவாதிரை விரதத்தோடு தொடர்புபடுத்தி அநுட்டிக்கின்றனர். வைணவ மக்களுக்குரிய சிறப்பு விரதமான சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் மார்கழி மாதத்திலேயே அமைந்திருக்கிறது. இருப்பினும் வைணவர்கள் திருப்பாவை விரதத்தினை மார்கழி மாதம் முழுவதும் அநுட்டிக்கின்றனர்.

திருப்பாவை பாடிய ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையின் முதலாம் பாடலிலேயே ''மார்கழித்திங்கள்மதி நிறைந்த நன்னுள்'' எனறு மார்கழி மாதம் முழுவதையும் போற்றுகின்றார்.

மார்கழி நீராடலுக்கே வணக்கம் தெரிவிக்கும் முறையில் மாணிக்கவாசகரின் திருவெம்பாவைக்கடைசி வரி அமைந்திருக்கின்றது.

பன்னிரண்டு மாதங்களில் ஒவ்வொரு மாதங்களுக்கும் சிறப்பு உண்டு. மார்கழி மாதம் சிறந்தது என்பதற்காகப் பிறமாதங்கள் இழிந்தது என்று கருத்தில்லை. பூக்களிலே சிறந்தது தாமரை என்றுசொல்வதால்பிறபூக்கள் எப்படி அருவருக்கப்படுவதில்லையோ அப்படியான அடிப்படையில்தான் மார்கழி மாதம் சிறப்படைந்து விளங்குகின்றது.

'மாதங்களில் அவள் மார்கழி - மலர்களிலே அவள் மல்லிகை' என்று பாட்டிசைக்கும் திரைப்படக் கவிஞன் மார்கழி பற்றி ஒரு

(5-ம் பக்கம் பார்க்க)

## கடைசி நேர

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

செற்றுபாம் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு வந்துள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும். வி. ரி. வல்லிபுரம், நந்தாவில் லேன், தாவடி. (2522)

ஜப்பான் ஸ்பிற்ஜ் (Japanese Spitz) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல: 8, றெயில்வே விடுதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (2508)

குறைந்தவிலையில் Sisil Deep-Freezer குளிர்சாதனப்பெட்டியும், Brother Electronic Type-writer 4 Colours 3 Type Letters, 8 Kinds Graph, Computer with Calculaterரும், சிறு பழுதுடன் கூடிய Phillips 27'' Colour டெலிவிஷனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராதா 21. வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (2511)

### தவறிவிட்டது

இல. DD/10, 203508 காசோலை 18-12-85 அன்று மானிப்பாய் - நவாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பரிமளா ஸ்ரோர்ஸ், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (2509)

### மலிவு விற்பனை

விற்று தீர்ப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு ஜவுளி வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன 31-12-85 வரை மட்டுமே,

வனஜா ரெக்ஸ்ரையில்ஸ், 144, மொடேர்ன் மாக்கற், யாழ்ப்பாணம். [2512]

### உஷாமினி

10-30, 2-30, 4-45, 6-45

AMERICAN WARRIOR

### எம்பயர்

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30

தியாகராஜன் - சரிதா

மலையூர்மம்பட்டியான்

### லிடோ சினிமா

10-30, 2-30, 4-30, 6-30

இலகரூனிக் சுருமீனின் சாகசக் காட்சிகள் நிறைந்த

JAWS III

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30

சிவகுமார்-பிரமிளா நடித்த பாலச்சந்தரின்

அரங்கேற்றம்

25-ந் திகதி முதல்

நான் பாடும் பாடல்


## சகல அரசியல் கைதிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இளைஞர்கள் பரவலாகக் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இவர்களைப் பாதுகாப்புப்படையினர் கைது செய்யச் செல்லும்போது குறிப்பிட்ட நபர்கள் இல்லாத நேரத்தில் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

இவர்கள் சாதாரண சட்டங்களின்கீழும், அவசரகாலச் சட்டத்தின்கீழுமே கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சட்ட விதிகளின்கீழ் அரசாங்கம் இக்கைதிகளை விசாரணையின்றி நீண்டகாலமாகத் தடுத்துவைக்கலாம். அத்துடன் இவர்களை சுற்றத்தாரின் தொடர்பின்றி தான் விரும்பும் இடத்தில் தடுத்துவைக்கலாம்.''

இதனால் இவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படலாம். கொலைசெய்யப்படலாம். மேலும் இவ்விரு சட்டங்களும் அரசாங்கத்தை, கைதுசெய்படுபவர்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யவேண்டிய கட்டாயத்திலிருந்து விடுவிக்கின்றது. இச்செயலானது அரசாங்கம் தனக்குப் பிடிக்காத எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் ஏனைய எதிர்ப்பாளர்களையும் ஒடுக்க ஏதுவாகின்றது. இது மக்களின் ஜனநாயக உரிமைகளைக்குழிதோண்டி புதைக்கும் செயலாகும். ஆகவே இக்கைதிகளினதும் நாட்டினதும் நன்மைகருதிக் கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிட வேண்டும். அத்துடன் இவர்கள்மீதான விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு குற்றமற்றிருப்பின் அவர்களை விடுதலைசெய்ய வேண்டும். இவர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும்'' என்று அந்த இயக்கம் மேலும் கேட்டுள்ளது.

இந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில் வண. திஸ்ஸ பாலசூரியா, வண, புத்தியாகம சன்தாரரத்ன தேரோ, ராதிகா குமாரசாமி, டி. பி. எஸ். ஜெயராஜ், கலாநிதி குமாரி ஜெயவர்த்தன ஆகியோரும் அடங்குவர். [செ]

## வெள்ளிச்சிந்தனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பைக் குறிக்கிறான். அதாவது: மார்கழி மாதத்தின் ஒவ்வொரு நாட்காலையும் பெருமையுடையதாகவும் நல்லோரால் விரும்பப்படுவதாகவும் விளங்குவதுபோலவே தலைவன் ஒருவன் தலைவியின் ஒவ்வொரு செயலையும் - அழகையும் விரும்புகிறான். தலைவன் ஒருவன் தலைவியைவிரும்புவதுபோன்று தெய்வீகத்தைப் பெருக்குவதற்காக வாழ்வாங்கு வாழவிரும்பும் நன்மக்கள் ஒவ்வொருவரும் மார்கழி மாதத்தை விரும்புகின்றனர்! மார்கழி வைகறைவேளையில் துயிலெழுபவருடைய உள்ளத்தில் ஒடுங்கியிருக்கும் தெய்வீக தத்துவங்புள் விழப்படையும். இந்த உண்மையை உணரும் வகையில் ஒவ்வொருவரும் அதிகாலையில் உறக்கத்தின் நீங்கி தெய்வ வழிபாட்டில் முயன்று தம்மையும் தம் சூழலையும் சிவப்பொலிவடையச் செய்தல் நன்று.

போற்றியருளுக நின்
ஆதியாம் பாதமலர்
போற்றியருளுகளின்
அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும்
ஈறும் இணையடிகள்
போற்றி மால்நான் முகனும்
காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்
கொண்டருளும் பொன்மலர்
கள்
போற்றியாம் மார்கழி நீர்
ஆடேலோரெம் பாவாய்.
-மாணிக்கவாசகசுவாமிகள்

## இலங்கை. ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட வேண்டும், இதற்காகநாம் எத்தியாகமும்செய்ய தயாராக வேண்டும், பாகிஸ்தானில் இப் புத்தகங்களால் குழப்பம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கில் மக்கள் இறந்துள்ளனர்.'' என்று அமைச்சர் முஹம்மது அவர்கள் சொல்லியிருப்பதை ''ஹன்சார்ட்டில்'' பதிவாகியிருப்பதை நாம் ஒரு அபாய அறிவிப்பாக எடுக்க வேண்டும்.

ஸீயாக்களின் கொள்கைகளைப் பின்பற்றுவோர குர்ஆன் காட்டும் வாழ்க்கைமுறை ஒன்றுமட்டும்தான் விமோசனத்திற்கு வழி என்று கூறுவார்கள். நாம் ஆளப்பிறந்தவர்கள். அமைகளல்ல என்பார்கள். எமது ஆட்சி உலகம்பூரவும் வியாபித்திருக்கவேண்டும் என்றும்சொல்லுவார்கள். மக்கள் நம்புவார்கள். பெருமானார் முஹ்மது (ஸல்) அவர்கள் சொல், செயல், வாழ்க்கை வழிமுறைகள் உதாசீனம்செய்யப்படும். இக்காலத்துக்குஅது ஒவ்வாது என்றும் துணிந்து கூறுவார்கள். இமாம்களை, அவர்கள் சட்டதிட்டங்களை, நாயகத்தோழர்களைஉதாசீனம் செய்வார்கள். துகவும் கேவலப்படுத்துவார்கள். அவர்கள் மாய்மாலப் பேச்சில் ஒருசிலர் மயங்கி அக்கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்ப முயற்சி செய்யும்போது எதிர்ப்பு கிளம்பும். முடிவு பெரும் இரத்தக் களரிதான். ''ஸியோனிஸிம்'' எப்படிப் பயங்கரமானதோ அதே போளிறு 'ஸியாஇஸிம், மிகவும்பயங்கரமானது.

— அகுமது கரீம்
அக்பர் ஜின்ன
யாழ்ப்பாணம்.

## இன்றுமுதல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்தில் வெள்ளி, ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய நான்கு நாட்களிலும் மேற்குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை 'யாழ்தேவி' 'உத்தரதேவி' ரயில்சேவைகள் பற்றி ரயில்வேபகுதியினர் அறிவிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் ரயில் டிக்கட்டுகளை, யாழ். விளையாட்டரங்கிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.


### பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்(வ/து)

## கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை ப. நோ, கூ. சங்கத்தில் சுமார் 8,245வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக உண்டு. கேள்விப் பத்திரத்தை வைப்புப் பணமாக ரூபா 50/- ஐயும், கேள்விப் பத்திரத்திற்கு ரூபா 5/- ஐயும் கட்டி கந்தோர் நேரத்தில் பொதுமுகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் பெறும் கடைசித்திகதி 30-12-85. கேள்விப்பத்திரத்தை ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால்மூலம் 30-12-85ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்,
பருத்தித்துறை,
ப. நோ. கூ. சங்கம்,
19-12-1985

[2517]


## பொதுமக்க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொதுமக்கள் அம்மூவரையும் பிடிப்பதற்குத் துரத்திச் சென்றனர்.

அப்பொழுது ஒரு நபர் பிரான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் தம்மைப் பின் தொடர்ந்தவர்களை நோக்கிச் சுட்டார். அதில் ஒருவர் காயமடைந்தார் மீண்டும் பொதுமக்கள் துரத்திச்சென்று ஒருவரை மடக்கிப்பிடித்தனர். அவர்பின்னர் ஸ்தலத்திலேயே மரணமானார். மற்றைய இரு நபர்களும் தப்பி ஓடிவிட்டனராம். [மா]

## சுவிஸ் அரசு ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்ந்த மற்ற மாவட்டங்களில், அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகியுள்ளதுடன் தமிழ் மக்களின் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும், யாழ். பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

மற்றும் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளதாகவும் தற்போது கூட இங்கு இளைஞர் முதல் வயோதிபர் வரை, நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான முயற்சியில் ஈடுபட் வருவதாகவும் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் முகாம் அமைத்து சுவிஸிலுள்ள தமிழ் அகதிகள் அனுப்பப்பட்டால், அங்கு அவர்கள் பணயக்கைதிகளாகவேஇருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என எடுத்துக் கூறினர்கள்.

சுவிஸில் தஞ்சமடைந்த தமிழ் மக்களை இதுவரை காலமும் ஆதரித்த சுவிஸ் அரசுக்கு யாழ். பிரஜைகள் குழுவினர் நன்றி தெரிவித்தனர்.

யாழ். உதவி அரசாங்க அதிபரும், பொதுசன தொடர்பு அதிகாரியுமான திரு. ரி குலசேகரமும் இச்சந்திப்பின் போது சமூகமளித்திருந்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த சுவிஸ் தூதுக்குழுவினர் வடமராட்சிப்பகுதிக்கு சென்று அங்கு பாதிக் ப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர். அங்குள்ள பிரஜைகள் குழுவினரையும் அவர்கள் சந்தித்தனர். இக்குழுவினர் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தையும் சந்தித்தனர்.

இன்று காலை யாழ். கச்சேரியில் சுவிஸ் குழுவினர் சகல மதங்களின் தலைவர்களையும் சந்தித்து பேசுவார்கள்.

சுவிஸ் குழுவிலுள்ள நீதி அமைச்சைச்சேர்ந்த இரு அதிகாரிகளும் நாடு திரும்பியதும் இங்குள்ள நிலைமை தொடர்பாக சுவிஸ் அரசாங்கத்திடம் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பார்கள்,

## கவிஞர் நலம்பெற பிரார்த்தனை

நல்லை ஆதீனத்தில் நடக்கும் ஓர் கம்பன் விழாவின் கவியரங்க மேடை. ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆர்வத்தோடு கார்வையாளர்களாக கவிதைகளைச் சுவைக்கக் காத்திருக்கின்றனர். மற்றொரு புறத்தில் தமிழ்நாட்டுப் பேரறிஞர் இரா. இராதாகிருஷ்ணன் ஆர்வத்தோடு மேடையை நோக்கியவண்ணம் அமர்ந்திருக்கிறார். இச்சூழ்நிலையில் கவியரங்கத் தலைவர் மறைந்த வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் ''ஐயாத்துரைக் கவிஞ, அழகாகக் கவி பாடு!'' என்று தன் கணீரென்ற குரலில் சொல்லியபடி அருகில் அமர்ந்திருந்த கவிஞர்குழாமை நோக்க அக்கவிஞர்களிலிருந்து மெலிந்த தோற்றம், கூர்மையான பார்வை, மிகுந்த தன்னடக்கம் நிரம்பிய ஓர் கவிஞர் மெல்ல எழும்புகிறார். சலசலதத சபை மெல்ல அடங்குகிறது. ஒலிவாங்கியின் முன்னல் கவிஞர் ஐயாத்துரை நின்று இசைசேர்த்து தன் கவிதையைப் பாடத்தொடங்

[8-ம் பக்கம் பார்க்க]

## மூடவேண்டாம்...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

கம்பஹா தொகுதி எம். பி. எஸ். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். [ய-மா]

## அசாம்...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிக்கு 19 இடங்களும் ஐக்கிய சிறுபான்மை முன்னணிக்கு 10 இடங்களும் கிடைத்துள்ளன.

அசாம் கனபரிசத் அறுதிப் பெரும்பான்மை பலம் பெறுவதற்கு இன்னமும் 9 இடங்கள் அதற்குத் தேவையாகும்.

## தமிழ்ப் பகுதிகளை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் த. வி. கூட்டணி சமர்ப்பித்த ஆலோசனைகளுக்கு இலங்கை அரசு உறுதியான வரவேற்பு அளிக்க வேண்டும். இதன் பின்னர் தான் இலங்கை அரசுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி ஆராயப்படும் என்று த. வி. கூட்டணி முன்னர் கூறியது. அதனையே கூட்டணி இப்போதும் கடைப்பிடிக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதற்கு தாம் ஆயுதங்களை வழங்கத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் ஜனதிபதி ஸியாவுல்ஹக் தெரிவித்துள்ள கருத்து குறித்து இந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்

விஜயரத்தினம் நிமலேஸ்வரன்

சுண்டுக்குழி67, ஈச்சமோட்டை வீதியில் வசிக்கும் விஜயரத்தினம் தாரிணி தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வன் நிமலேஸ்வரன் தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (20-12-85) வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.



இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, தாத்தாமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார் அனைவரும் ஞான வைரவரின் அருள்பெற்று சிறப்புடன் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (2516)

## துப்பாக்கிச் சூடுபட்டு மரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடந்த 14ம் திகதி மரணமான கந்தர் மடத்தை சேர்ந்த தமது தோழர் செல்லத்துரை குணசேகரன் (சந்திரன்) (18 வயது) என்பவருக்கு அஞ்சலி செலுத்தி, புதுக்கவிதை வடிவத்தில் பிரசுரம் ஒன்றை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) நேற்று வெளியிட்டுள்ளது.

''தோழர்களுடன் நின்றுய் கைக்குண்டு வீசஎறியும்போது வேட்டில் மரணமடைந்தாய்'' என்று 'வீர அஞ்சலி' என்ற தலைப்பிலான அபபிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(மா)

## விமர்சன அரங்கு

[யாழ்ப்டாணம்]

கவிஞர் செழியனின் 'மரணம்' என்ற கவிதைத் தொகுதி விமர்சன அரங்கு இன்று காலை 10மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்பொது அறையில் இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக் கழக கலாசார குழுவின் ஆதரவில் விமர்சன அரங்கு நிகழவுள்ளது. [மா]





உங்கள் கனவுக் கார், மற்றும் பல அற்புத பரிசுகளை வெல்ல இதோ உங்களுக்கோர் சந்தர்ப்பம்!

நீங்கள் வெல்லும் சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்க ஒவ்வொரு மாதமும் சீட்டிழுப்பு - முதலாவது நவம்பர் 1, இரண்டாவது டிசம்பர் 2, மா பெரும் சீட்டிழுப்பு '86 ஜனவரி 10 ஆகிய தேதிகளில் இடம் பெறும்.

ஒவ்வொரு மாதமும் பின்வரும் பரிசுகளைப் பெற உங்களுக்குச் சந்தர்ப்பம் உண்டு:

1-ம் பரிசு 20'' கலர் டெலிவிஷன்
2-ம் பரிசு 5 கன அடி குளிர்ப் பெட்டி
3-ம் பரிசு தையல் மெஷின்
4-ம் பரிசு கசெட்-றெக்கோடர்
5-ம் பரிசு 2 அடுப்பு கேஸ் குக்கர்
மற்றும் 50 ஆறுதற் பரிசுகள் - ரூ. 650 வீதம்

இவற்றுடன்

மா பெரும் முடிவுச் சீட்டிழுப்பில் பெரும் பரிசாக ஒரு இசுசு 1500 சிசி சொகுசுக் கார் -இலங்கையில் இது போன்ற முதற் கார் இதுவே.

நீங்கள் செய்ய வேண்டியது இதுவே :-

இத்துடன் உள்ள விண்ணப்பத் தாளில் காணப்படும் எளிமையான கேள்விக்கு விடை எழுதி அனுப்ப வேண்டும். விலாசம்-

''லக்ஸ்பிறே போட்டி'' த.பெ. எண் 988, கொழும்பு.

பரிசு பெறுவோர் அனைவரும் தத்தம் பரிசுகளுக்குப் பெறுமதியான ரொக்கப் பணத்தை விரும்பினல் பெற்றுக் கொள்ளலாம்.

LAKSPRAY - உலகின் உன்னத பாற் பண்ணைகளிலிருந்து இறக்குமதியா கிறது.

**விரையுங்கள்! மாபெரும் சீட்டிழுப்பின் முடிவு திகதி 31 டிசம்பர்**

விதிகள்:

1) எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பின்வரும் முறைப்படி LAKSPRAY என்ற வார்த்தையை வெட்டி இணைக்க வேண்டும்:
800 கிராம் சிக்கன பக்கெட்டில் வெட்டிய 2 "LAKSPRAY" துண்டுகள் அல்லது 500 கிராம் பக்கெட்டில் வெட்டிய 4 "LAKSPRAY" துண்டுகள் அல்லது 250 கிராம் பக்கெட்டில் வெட்டிய 8 "LAKSPRAY" துண்டுகள்.
2) விண்ணப்பத் தாள்கள் பத்திரிகைகளிலும் உங்கள் வியாபாரிகளிடமும் கிடைக்கும். வெற்றுக் தாளில் பிரதி செய்யப்பட்ட விண்ணப்பத் தாள்களும் ஏற்கப்படும்.
3) 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில், முதலில் இழுக்கப்படும் 55 சரியான, துப்புரவான விண்னப்பங்களுக்கு மேலே குறிப்பிட்ட பரிசுகள் கிடைக்கும். 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில் பரிசு பெருத விண்ணப்பங்கள் மா பெரும் முடிவுச் சீட்டிழுப்பில் பரிசு பெறத் தகுதியுடையவை. முடிவுச் சீட்டிழுப்பில் முதலில் இழுக்கப்படும் சரியான, துப்புரவான விண்ணப்பத்துக்கு இசுசு கார் பரிசாகக் கிடைக்கும். அடுத்து இழுக்கப்படும் சரியான, துப்புரவான 55 விண்ணப்பங்களுக்கும் 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில் போலவே பரிசுகள் கிடைக்கும்.
4) ஒவ்வொரு சீட்டிழுப்பின் பிறகும் பரிசு பெறுவோர் பட்டியல் பத்திரிகைகளில் பிரசுரமாகும்.
5) நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
6) லங்கா மில்க் புட்ஸ் (கூ,மொ.வி.) லிமிட்டெட், அதன் விளம்பரப் பிரதிநிதிகள் ஆகிய நிறுவன ஊழியர்களையும் உடனடிக் குடும்பத்தினரையும் தவிர, இலங்கையில் வசிக்கும் சகலரும் லக்ஸ்பிறே போட்டியில் கலந்து கொள்ளலாம்.

**வியாபாரிகளுக்கான விசேஷ பரிசுகள்**

ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் முதல் மூன்று பரிசாளரும் குறித்துள்ள வியாபாரிகளுக்குப் பின்வருமாறு பரிசுகள் கிடைக்கும்:-

1-ம் பரிசு ரூ. 2,500/-
2-ம் பரிசு ரூ. 1,500/- 3-ம் பரிசு ரூ. 1,000/-



விண்ணப்பத் தாள்

லக்ஸ்பிறே பக்கெட்டில் எத்தனை பசுக்கள் காணப்படுகின்றன? ______

பெயர்: ______

விலாசம்: ______

வியாபாரியின் பெயர்: ______

விலாசம்: ______

ZENITH

Licence No. S/473

# இப்படியும் நடக்கிறது

"எமது அரசாங்கம் சகல மக்களையும் சமமாக மதித்து வருகிறது.

''வடக்கு, கிழக்கில் தவறான வழியில் இட்டுச்செல்லப் பட்டுள்ளஇளைஞர்கள் தமது அடிப்படை உரிமைசளை நிலை நாட்டுவதற்கு ஏன் ஒருவரை ஒருவர் கொலை செய்ய வேண்டும். சுட்டுக் கொள்ள வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

''அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டால், தமிழர் ஒருவரே பிரதம நீதியரசராகவிருக்கும் உயர் நீதிமன்றத் துக்குச் செல்லலாம். தமிழர் ஒருவர்தான் சட்டமா அதிபராகவும் இருக்கின்றார். தமக்குச்சாதமாகத் தீர்ப் பையும் பெற்றுக்கொள்ளலாம்...''

இப்படிக் கூறியவர்: ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெய வர்த்தன. இடம்: மாளிகாவத்தையிலுள்ள வீடமைபுத் திட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இலங்கை இஸ்லாமிய நிலையத் திறப்பு விழா வைபவம். ஜனாதிபதியின் கருத்து: நன்றி - ரூபவாஹினி (18-12-85 செய்தி)

ஒரு மயக்கம்: ''தமிழர் ஒருவர்தான் சட்டமா அதிபராகவும் இருக்கின்றார். தமக்குச் சாதகமாகத் தீர்ப் பையும் பெற்றுக்கொள்ளலாம்...''

''ஊடுருவி''

## மாணவர்களின்

(4ம்பக்க தொடர்ச்சி)

யாலய அதிபர் பேசுகையில் மாணவர்கள் வீட்டிலிருந்து தமத பாடங்களை நாளாந்தம் திரும்பப்படிப்பதற்குப் பெற்றோர் ஊக்கம் கொடுப்பதோடு அவர்களது பழக்கவழக்கங்கள் பற்றியும் கண்ணோட்டமாக இருத்தல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார் தொடர்ந்து இருபாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் பரிசு வழங்குதலும் இடம் பெற்றன.

## நவாலி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அதன் கடமைகள் பற்றி எடுத்து விளக்கினர்.

புதிய தலைவர் தெரிவில் சி. ஜே. இளையதம்பி தலைவராக ஏகமனதுடன் தெரிவு செய்யபட்டார். உப தலைவராக திரு. அ. சதாசிவமும், கணக்கு பரிசோதகராக திரு. ரி. ஏணஸ்ற்ரும் தெரிவு செயப்பட்டனர்.

## பனை ஓலை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையத்தில் இவ் வாழ்த்து மடல்களை உற்பத்தி செய்கின்றார்கள்.

பனை ஓலை வாழ்த்து மடல்களுக்கு பொதுவாக கிறிஸ்தவ மக்களும், குறிப்பாக கிறிஸ்தவ குருமாரும் முன்னுரிமை கொடுத்து வாங்கிக் கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.


## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். மலிவு விலையில் உடுபிடவைகளைப்பெற:

லேடன் இன்டஸ்ரியஸ் தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:

**லேடன் காமன்ஸ் லிமிட்டெட்,**

86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(2485) தொலைபேசி: 22330



## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

### காணி வாங்கி விற்கும் பகுதி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் எம்மால் உடனடியாக விற்பனை செய்யப்பட உள்ளன. வாங்க விரும்புவோர் கடிதமூலமோ / நேரிலோ உடன் தொடர்புகொள்ளவும்.

(1) நீர்வேலியில் வீடுகட்டக்கூடிய நல்ல காணி 5 பரப்பு.

(2) தாவடியில் சகல வசதிகளுடனும் 3 பரப்புக் காணி.

(3) இலந்தைக்குளம் றோட், கொழும்புத்துறையில் 3½ பரப்புக்காணி.

மேலும் காணிகளை விற்கவோ / வாங்கவோ விரும்புபவர்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு முகவரி:-

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்**

இல. 303, பலாலி றோட்,

கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.


# இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 5 (1985-12-20)
கிழமை- வெள்ளி
திதி- பின்இரவு வரை
நக்ஷத்திரம்- உத்திரட்டாதி பி.ப வரை

மேடம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். தானியவிருத்தியும் உண்டு.

இடபம்: குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும். அமைதியுடன் இருக்கவும்.

மிதுனம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். முன்னேற வழியும் தோன்றும். தாய்வழிச்சுகமும் உண்டு.

கடகம்: செய் தொழிலால் சிறப்புண்டு. புத்திர வழியால் நன்மைகளுண்டு. இன்று முயற்சியும் கைகூடும்.

சிங்கம்: பகைமூட்டம் தோன்றும். பதட்டம் உடன் சேரும். மிகையான போக்கினால் மனதும் பாழாய்ப் போகும்.

கன்னி: வெளியிடத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும். திடீர்பிரயாணத்துக்கும் இடமுண்டு. சுகாதாரம் வேண்டும்.

துலாம்: ஆதாவுகொடுத்தவர் முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன்தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் வேண்டும். நீண்ட நாள் நண்பரொருவரை மீண்டும் சந்திக்க நேரிடும்.

தனுசு: கற்றதனல் பயன் இன்று கட்டாயம் கிட்டும் அறிஞர்கள் போற்றுவர். ஆதரவும் கிடைக்கும்.

மகரம்: அதிஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு. கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு நன்மையுமுண்டு.

கும்பம்: உறவு முறையில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மீனம்: தொழில்புரியுமிடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகளுக்கு இடமுண்டு. உடல் நலத்தைப் பேணவும்.

திருமலை
வே. ரவீந்திரன்


● இத்தாலி
● பிரான்ஸ்
● மேற்கு ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு

உங்களை எமது பிரதிநிதி December 26-ம் திகதி அழைத்துச் செல்வார்

மற்றும்

பாஸ்போட், பொண்ட், விசா

என்பனவற்றுக்கு தொடர்பு கொள்ளவும்:

**லிப்ரூஸ் லிமிட்டெட்**

R. G. கட்டிடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
Pettah.
T. P. 29148.



உங்கள் பணத்திற்கு 6, 12, 24, 36 மாதங்களில்
அபரிமிதமான வட்டியுடன்

## பெருந்தொகைப் பணம் கிடைக்கிறது

இறிய முதலீடு அதிக பணம்

| கால முதிர்வுக்கு | வைப்பிலிடும் தொகை | வட்டி வீதம் | காலமுதிர்வில் முழுத்தொகை |
|---|---|---|---|
| 6 | Rs. 4608/- | 17% | Rs. 5,000/- |
| | Rs. 9217/- | 17% | Rs. 10,000/- |
| | Rs, 18434 - | 17% | Rs. 20,000/- |
| | Rs. 46083/- | 17% | Rs. 50,000/- |
| | Rs. 91743/- | 18% | Rs. 100,000/- |
| 12 | Rs. 4166/- | 20% | Rs. 5,000/- |
| | Rs. 8333/- | 20% | Rs. 10,000/- |
| | Rs 16666/- | 20% | Rs. 20,000/- |
| | Rs. 41667/- | 20% | Rs. 50,000/- |
| | Rs. 82645/- | 21% | Rs. 100,000/- |
| 24 | Rs. 3425/- | 23% | Rs. 5,000/- |
| | Rs. 6849/- | 23% | Rs. 10,000/- |
| | Rs. 13698/ | 23% | Rs. 20,000/- |
| | Rs. 34246/- | 23% | Rs. 50,000/- |
| | Rs. 67568/- | 24% | Rs. 100,000/- |
| 36 | Rs. 2762/- | 27% | Rs. 5,000/- |
| | Rs. 5525/- | 27% | Rs. 10 000/- |
| | Rs. 11050/- | 27% | Rs. 20,000/- |
| | Rs. 27625/- | 27% | Rs. 50,000/- |
| | Rs. 55249/- | 27% | Rs. 100,000/- |

27% வட்டி கிடைக்கும்

உங்கள் பணத்திற்கான முழுப் பொறுப்பும் எங்களுடையது. வட்டியை மாதாந்தம் உங்கள் வீடுகளுக்கே அனுப்பிவைக்கிறோம். 36 மாதங்களில் 55,249 ரூபாய் ஒரு லட்ச ரூபாயாக வட்டியும் முதலுமாக கிடைக்கிறது.

வடமாகாணத்தில் பின்பலம் கொண்ட ஒரே நிதிநிறுவனம்.

**யூனியன் ரஸ்ட் அன் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்**

**UNION TRUST & INVESTMENTS LTD.,**

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24267

தலைமையகம்: 347, யூனியன் பிளேஸ், கொழும்பு-02.

கிளை: 78, கிங்ஸ் வீதி, கண்டி.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## கலைப்பட்டதாரி ஆசிரியர்கள்

[கொழும்பு]
கலைப்பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:- செல்வி எஸ். சற்குணதேவி [சித்தன்கேணி]. வி. மனோகரன் (அல்வாய்), எஸ். பாஸ்கரன் [வேலணை], எஸ். விவேகானந்தன் [வேலணை], எம். பாலசிங்கம் [கொடிகாமம்], கே. மங்களேஸ்வரன் (கொடிகாமம்), செல்வி ஆர். ஐமுனை (பருத்தித்துறை], செல்வி எம். ஜெபலக்ஷ்சுமி [பருத்தித்துறை]. செல்வி என். ராஜமோகனை [நல்லூர்], செல்வி எஸ். நந்தினி [உடுவில்], செல்வி டி, நடராசா [பருத்தித்துறை செல்வி ஆர். வி. சர்மா [சுன்னுகம்], செல்வி எஸ். செல்லத்துரை [நல்லூர்], செல்வி வை. செல்லமுத்து [அச்சுவேலி]. செல்வி ஜி. வ..வ தேவி [ஆனைப்பந்தி]

[தொடரும்]

### ஆசிரியர் முன்சேவைப் பயிற்சி

## அனுமதிக் கடிதங்கள் இங்கே கிடைக்கும்

(கொழும்பு)
விரைவில் ஆசிரியர் நியமனம் பெறவிருக்கும் கலைப் பட்டதாரி, சங்கீத நடன ஆசிரியர்களுக்கான ஆசிரியர் முன்சேவைப் பயிற்சி இம்மாதம் **26ம் திகதி முதல் நடைபெறும்.**

இதற்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும், மேற்படி அனுமதிக் கடிதங்களை அந்தந்தப் பகுதி பிராந்திய கல்விப்பணிப்பாளர் அலுவலகங்களுக்குச் சென்றும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர் முன்சேவைப் பயிற்சியில் 500 கலைப்பட்டதாரிகளும், 50க்கு மேற்பட்ட சங்கீத, நடன ஆசிரியர்களும், 10 க்கு மேற்பட்ட க. பொ. த. (உர்தர) தராதரமுடைய ஆசிரியர்களும் இடம் பெறுவார்கள்.

## கடத்தப்பட்ட சிகரெட் லொறி மரத்துடன் மோதியது

### சாரதி ஸ்தலத்தில் பலி

[மட்டக்களப்பு]
கடத்திச் செல்லப்பட்ட 'சிகரெட்லொறி' மரமொன்றுடன்மோதுண்டதால், சாரதி ஸ்தலத்திலேயே பலியானுர். இதனைத் தொடர்ந்து, கடத்திச் சென்றவர்கள் சிகரட் லொறியை அவ்விடத்திலேயே கைவிட்டு, பலியான தங்கள் சாரதித் தோழரைத் தூக்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

மட்டக்களப்பிலுள்ள இலுப்பையடிச்சேனையில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு சிகரெட் ஏற்றி வந்த லொறி இனந்தெரியாத நபர்களால் செங்கலடியில் வைத்துக் கடத்திச் செல்லப் பட்டது. பதுளைவீதிவழியாக கடத்திச் சென்றவர்கள் லொறியை ஓட்டிச் சென்ற போதே அந்தலொறி மரமொன்றுடன்மோதி விபத்துக்குள்ளானது. (மா)

## கண்டெடுத்த பணம் நூல்நிலைய சொத்தாகிறது!

24-9-1984ம் ஆண்டு காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த 769ம் இலக்கப் பாதை மினிபஸ்ஸில் டணம் ரூபா 500 பயணி ஒருவரால் தவறவிடப்பட்டது. இதை அன்று அந்த பஸ்வண்டியல்வந்த சகபயணி ஒருவர் கண்டெடுத்து எமது ஸ்தாபனத்தில் ஒப்படைத்தார். ஆனுல் இன்று ஒருவருடத்துக்கு மேலாகிவிட்டபோதிலும் அப்பணம் உரிமைகோரப் **படவில்லை.**

இந்நிலையில் அதனைக்கண்டெடுத்து ஒப்படைத்தவர் மீண்டும் எம்முடன் தொடர்பு கொண்டுள்ளார். அவர் அப்பணத்தொகை வெறுமனே இருப்பதை அறிந்து அதனைத் தமது சொந்த ஊரான ஏழாலை மேற்கில் உள்ள சித்தி விநாயகர் நூல் நிலையத்துக்கு வழங்கும்படி சிபார்சு செய் **துள்ளார்.**

இப்பணத்தொகைபற்றி ஈழநாடு ஸ்தாபனமும் கடந்த ஆண்டு விளம்பரமொன்றைப் பிரசுரித்திருந்தது. எனவே எவரும் இதனை இதுவரை **உரிமைகோராததால் கண்டெடுத்தவரின் விருப்பத்துக்கு 'ஈழநாடு'** உடன்பட்டுள்ளது. இம்மாதம் 30ம் திகதி அப்பணம் கையளிக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

— நிர்வாகி.

## "தமிழர் பகுதி உப்பளங்கள் செயலற்றுள்ளன"

### கைத்தொழில் அமைச்சர் பேச்சு

[கொழும்பு]
ஆனையிறவு நிலாவெளி ஆகிய இடங்களிலுள்ள உப்பளங்கள் இன்று செயலற்ற நிலையிலுள்ளன. அந்த இரு உப்பளங்களின் அருகில் கூட போக முடியாமல் இருக்கிறோம்'' என்று கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. டென்சில் பெர்ணண்டோ கவலை தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கமநலசேவை நிலையத்தில் தளபாடங்கள் கொள்ளை!

(புலோலி)
கமநலச்சேவை நிலையபெரும்பாக உத்தியோகத்தரின் அலுவலகம் இரவுவேளை துப்பாக்கிகள் தாங்கிய இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினுல் உடைக்கப்பட்டு அங்கிருந்த சகல தளபாடங்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

சம்பவதினமிரவு கமநலச்சேவை நிலையத்தில் இரவு காவலாளி கடமையிலிருந்த போது கம்பி வேலியைப்பிடுங்கிக்கொண்டு துப்பாக்கிகள் சகிதம் உள்ளே புகுந்து கொண்ட இனந் தெரியாத இளைஞர் கோஷ்டி காவலாளியைப் பயமுறுத்தி பெரும்பாக உத்தியோகத்தரின் அறையை உடைத்தே தளபாடங்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இக் கமநலச் சேவை நிலைய பெரும்பாகஉத்தியோகத்தர் திரு. வி. இராசையா புகார் செய்துள்ளார்.

(க)

## உணவு முத்திரை விநியோகம்

(பண்டத்தரிப்பு)
சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 16வது கட்ட உணவு முத்திரை விநியோகம் நடைபெற்றுவருகின்றது. இந்த உணவு முத்திரைகள் ஆறுமாதகாலத்திற்குப் பயன்படுத்தக்கூடியனவாகும்.

## கவிஞர்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

குகிறுர். இலக்கணக் கட்டுப் பாட்டை மீறுமல் மரபுக் கவிதைகள் வெள்ளமென அவையில் பாய்கிறது. அவர் பாடும் ஒவ்வொரு கவிதையும் ஆனந்த பைரவி, மோகனம், கானடா போன்ற பல இராகங்களில் வெளிவர சபை இவரொரு இசைக் கலைஞரா, இயல் கலைஞரா என்று ஐயப்படுவது புரிகிறது. 15 நிமிடங்கள் தன் கவிதையைப் பாடிமுடித்து அவர் அமர சபையில் ஒரே கரகோஷம். பேராசிரியர் இராதாகிருஷ்ணன் கவிஞரின் கைகளைப் பற்றியபடிஉணர்ச்சி வசப்படுகிறுர்.

பண்போடு நடந்துகொள்ளும் கவிஞர் கலைத்தாயின்பால் தான் கொண்ட பேரன்பின் காரணமாய் தன் சொந்த ஊராகிய அரியாலையில் அன்னை சரஸ்வதிக்கு ஓர் ஆலயத்தை ஸ்தாபித்து தானே பூசகராயிருந்து அவ்வாலயத்தை பராமரித்து வருகிறுர். அக்கலைத் தாய்க்குச் சமர்ப்பணமாகத் தான் எழுதிய கவிதைகளை ''வெள்ளைக் கமலம்'' என்ற கவிதைத் தொகுப்பாய் வெளியிட்டார். இலங்கை வானொலியிலும் கவியரங்கில் இவர் குரல் அடிக்கடி ஒலிக்கும். யாழ்ப்பாணத்தில் இவர் குரல் கேட்காத கவியரங்கங்கள் மிகச்குறைவு. இவர் திறமையை உணர்ந்து அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் இவருக்கு பாராட்டு விழா நடத்திய போது பாராட்டு மலரும் வெளியிட்டனர்,

இத்தகைய புகழ்பெற்ற கவிஞர் வே. ஐயாத்துரை அவர்கள் தற்போது பாரிசவாதத்தினுல் பாதிப்புற்று நோய் வாய்ப்பட்டுள்ளார். வாதத்தினுல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்சப்பட்டிருந்த போதும் அவர் சோர்வுருமல் அவ்வாதத்தினை பற்றி வரைந்த கவிதை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியானதை அனைவரும் அறிவர்.

கலைத்தாயின் புதல்வர், கவிஞர் ஐயாத்துரையின் உடல், நலமுற வேண்டி 21 - 12 - 85 சனியன்று பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமையில் ஓர் பிரார்த்தனைக் கூட்டத்தை அவர் ஸ்தாபித்த சரஸ்வதி ஆலயத்திலேயே நடாத்த அகில இலங்கைக் கம்பன் கழகம் ஒழுங்கு செய்துள்ளது. உடல் நலம்பெற்று தொடர்ந்தும் தமிழ்ப்பணியாற்ற கவிஞருக்காக பிரார்த்தனை செய்ய வேண்டியது அனைத்து தமிழ் ஆர்வலர்களினதும் கடனுகும்.

**இ. ஜெயராஜ்**

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## மரணஅறிவித்தல்

### ஐயாத்துரை இராஜகோபால் பத்தர்

கேசாவில் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவரும், சிவன்கோவிலடி, ''லதா நகைமாளிகை'' உரிமையாளருமாகிய ஐயாத்துரை இராஜகோபால் பத்தர் காலமாகிவிட்டார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன் (யப்பான் ஜுவலர்ஸ்) யோகானந், தயாபரன், சந்திரன், புஸ்பலதா ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பமலர், பவானி, வசந்தா ஆகியோரின் அன்பு மாமனுரும், ஜெனித்தாவின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [20-12-85] 12-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

(2518) — இ. யோகேஸ்வரன்.

## மரண அறிவித்தல்

### திரு- தம்பையா தில்லைநாதன்

[இளைப்பாறிய காப்புறுதிப் பிரதிநிதி]

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. தம்பையா தில்லைநாதன் 18-12-85 அன்று சிவபதமெய்தினுர். அன்னுர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவநேசன், திருமதி கிருஷ்ணசாமி [அதிபர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை], திருமதி சிறிறங்கநாதன் [ஆசிரியை, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை], சிவதாசன் [உப முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னுகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும். பரமேஸ்வரி, கலாநிதி கிருஷ்ணசாமி [சிங்கப்பூர் பல்கலைககழகம்]. திரு. சிறிறங்கநாதன் [முன்னுள் தொழிலதிபர், தாசன் அன் கோ], சிவலோகேஸ்வரியின் அன்பு மாமனுரும், முருகதாஸ் [கணக்காய்வு பயிற்சியாளர், கிரெஸ்ரன் லிமிட்டெட், சாலினி [யாழ். மருத்துவபீடம்], கோகிலா [மாணவி வேம்படி] ஆகியோரின் இனிய பேரனுரும், திரு. பரம்சோதியின் அன்புச் சகோதரருமாவார். இவரின் ஈமக்கிரியைகள் வியாழன் நேற்று 19-12-85 பிற்பகல் 4-00 மணிக்கு அன்னுரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். [2520]

## மரண அறிவித்தல்

**திருமதி. யே. லூர்த்துமலர் (இன்பம்)**



**பிறப்பு: 20- 8- 41**

**இறப்பு: 18- 12- 85**

திருமதி யே. லூர்த்துமலர் (இன்பம்) அவர்கள் 18- 12- 85 அன்று மலேசியாவில் காலமாகிவிட்டார். இவர் M. A. யேசுதாசன் (இரட்டினராஜா) (நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சுறேஸ், றமேஸ், சதீஸ், சுவீற்ரி ஹாற்றிஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க. யோசேப், திரேசம்மா (செல்லக்குமாரத்தி) ஆகியோரின் சிரேஷ்டபுதல்வியும், இராஜேஸ், அன்ரன் (லண்டன்), பத்மராஜா (லண்டன்), ஜெயராணி (பபா), மேர்சி [இந்திரா], ஜீவா ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிவராஜா, ருதா, உமா, மேரியோசேப்பின், சூசைதாசன் (ராசா), ரெட்டினம், ஜெயம், அருள்செல்வி டெலிசியா ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னுரின் ஆத்மசாந்திக்கு துக்கப் பாடற் பூசை 20- 12-85 வெள்ளிக்கிழமை மாலை 5- 30 மணிக்கு யாழ். பரி. கொஞ்சேஞ்சிமாதா பேராலயத்தில் நிறைவேற்றப்படும்- இதில் கலந்துகொண்டு, அவவின் ஆத்மா சாந்தியடைய மன்றுடுமாறு வேண்டிக் கொள்ளுகின்றும்.

யோசேப் திரேசம்மா (செல்லக்குமாரத்தி)
குடும்பத்தினர்.
கொண்டடி றேட்,
யாழ்ப்பாணம்.
(2521)